வினாக்கள்—விடைகள்

195—

சொட்டு நீர்ப்பாசன முறையை கையாளும் விவசாயிகளுக்கு தரமுள்ள உபகரணங்களை வழங்குதல்.

*16529 திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சொட்டு நீர்ப்பாசன முறையை பயன்படுத்திய விவசாயிகள் அனைவரும் அதன் செயல்பாடு சரியில்லாததால், நஷ்டம் அடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தரமுள்ள உபகரணங்களை பொருத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இத்திட்டத்தின் கீழ் தரமுள்ள உபகரணங்கள் தான் வழங்கப்படுகின்றன.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் இந்தச் சொட்டு நீர் பாசனத்திற்கு 50% மானியம் வழங்குகிறது. இந்த 50% மானியம் வழங்குகிற காரணத்தினால் இதை நிறைய விவசாயிகள் பயன்படுத்த வேண்டுமென்று முன்வருகின்றபோது இந்த அரசு அங்கீகரித்து இருக்கக்கூடிய இந்த நிறுவனங்களால் தற்போது விஞ்ஞான ரீதியாக சில சிக்கல்கள் ஏற்பட்டிருக்கிறது, அதாவது தணணீரில் உருவாக்குகிற கொடி பாசி அல்லது இரசாயன மாற்றத்தினால் உருவாகக்கூடிய திடப்பொருள்கள், அந்தச் சொட்டு நீர் பாசனத்திற்கு வரக்கூடிய அந்தக் குழாய்களில் மிகக் குறுகியதாக இருக்கின்ற காரணத்தினால் அடைத்துக் கொள்கின்றன. எனவே, அந்தத் திட்டமே பல இடங்களில் பொய்த்து நாம் அரசாங்கத்தின் மூலமாகக் கொடுக்கின்ற 50% மானியமும், விவசாயி கொடுக்கின்ற 50%ம் வீணாகிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் நல்ல உபகரணங்களைத் தேடி அரசாங்கம், எப்படித் தொல்லை ஏற்பட்டாலும், இந்த நிறுவனங்களை...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருக்கக் கூடாது என்று தெளிவான விதி இருக்கிறது.

வினாக்கள்-விடைகள்

திரு. க. அர்ச்சுனன்: எனவே, எப்படிப்பட்ட சிக்கல்கள் வருமானாலும், அவைகளையெல்லாம் தவிர்த்து, மேலை நாடுகளிடத்திலே அணுகி, நல்ல உபகரணங்களை வழங்க கூடிய நல்ல நிறுவனங்களை அரசு தேடுமா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைக்குச் சொட்டு நீர், தெளிப்பு நீர் போன்ற திட்டங்கள் பல ஆண்டுகளாக தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வந்தது. இந்தத் திட்டங்களை செம்மைப் படுத்த வேண்டும், இந்தத் திட்டத்தினுடைய முழுப் பயனும் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தான், நம்முடைய தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே ஒரு அரசு ஆணையை இந்தத் துறைக்கு வழங்கியிருக்கிறார்கள். அதிலே இந்தத் திட்டத்திலே பங்கு பெறக்கூடிய அந்தக் கருவிகளை தயாரிக்கக்கூடியவர்கள் கீழ்க்கண்டத் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டுமென்று அவர்களுக்கு அந்த ஆணை மூலமாக அறிவுரை செய்திருக்கிறோம். சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசனக்கருவி உற்பத்தியாளர்கள் ஐ. எஸ். ஐ., சிப்பெட் போன்ற சான்றிதழ்கள் பெற்று பொருட்கள் வழங்கப்பட வேண்டும். இதன் உற்பத்தியாளர்கள் உபயோகப்படுத்தப்படும் பொருட்களுக்கு 5 வருட உத்திரவாதம் தரவேண்டும். இம்முறைகளின் சீரான இயக்கத்திற்கும் 2 வருட உத்திரவாதம் தரவேண்டும். இம்முறைகளின் ஆயுட்காலம் முடியவுள்ள காலத்திற்கும் இவற்றை பராமரிக்க உதிரி பாகங்கள் வழங்கப்படவேண்டும். இம்முறைகளின் உற்பத்தியாளர்களின் வைப்புத் தொகை ரூபாய் 10 ஆயிரம் சிறுசேமிப்பு பத்திரங்களாக தலைமைப் பொறியாளரிடம் கொடுக்கப்பட வேண்டும். மேற்காணும் முறைகளுக்கு ஏற்ப ஒப்பந்தப் பத்திரங்களில் கையெழுத்திட்ட உற்பத்தியாளர்களுக்கு மட்டும் வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளரால் ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேலும் இம்முறைகள் விவசாயிகளால் வரவேற்கப்பட்டு இவற்றை நிறுவிடும் விவசாயிகளின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்து வருகிறது. சொட்டு நீர்பாசனம் தெளிப்புநீர்பாசனம் ஆகிய முறைகளை உபயோகப்படுத்திவரும் விவசாயிகள் நல்ல பயன்கள் அடைந்து மகிழ்ச்சியாக உள்ளார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிற குறைபாடுகள் இருக்குமாயின் அந்தக் குறைபாடுகளைப் பற்றி அரசினுடைய கவனத்திற்கு விவசாயிகளோ அல்லது மாண்புமிகு உறுப்பினர்களோ கொண்டு வருவார்களானால் அந்த நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுத்து அந்த விவசாயிகள் பயனடைகிற வகையில் அவைகள் சீர்செய்யப்படும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்

1993 மார்ச் 31]

முற்பகல் 10-50.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சொட்டு நீர்ப்பாசனம் என்பதைப் பொறுத்தவரையில் அரசாங்கம் கொடுக்கக்கூடிய 50 சதவீத மானியம் கிடைக்கிறது என்ற காரணத்தால் இதை ஏற்படுத்தக்கூடிய நிறுவனங்கள் வேகம், வேகமாக அதைச் செய்து முடித்துவிடுகிறார்கள். சென்ற ஆண்டு நானே இதைப் பயன்படுத்துவதற்கு முயற்சித்து இப்போது அந்த திட்டம் ஃபெய்லியர் ஆகி அதை எடுத்துவிடக்கூடிய நிலைமை எனக்கே ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இது எல்லா தண்ணீருக்கும் பொருந்தக்கூடியதாக இருக்க வேண்டும். அதாவது கெமிக்கல் ரீயாக்ஷன் காரணமாக அந்தக் குழாயின் இடையிலே அடைப்பு ஏற்படுகிறது. சொட்டு நீர்ப்பாசனம் என்பதைப் பொறுத்தவரையில் மிகக் குறுகிய குழாயை நாம் அமைக்கிறோம். அங்கே கெமிக்கல் ரீயாக்ஷன் காரணமாக திடப்பொருள் ஏற்படுகிறது. தண்ணிரிலே படர்ந்திருக்கக்கூடிய அந்த படர்பாசி என்பதும் அடைத்துக் கொள்கிறது. மேலும் எங்களுடைய பகுதியில் அதாவது சேலம், கோயம்புத்தூர் போன்ற பகுதிகளில் ஆழமான கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கிறோம். அப்போது பம்ப் செட்டுகளுக்குக் கீழே இருக்கிற லெதர் கிழிந்துவிடுகிற போது சாணியைக் கரைத்து ஊற்றி மோட்டாரை ஆன் செய்கிறபோது தண்ணீர் போய் அந்தக் குழாயில் அடைத்துக் கொள்கிறது. இவைகளை எல்லாம் ஆய்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிறுவனத்தோடு பேசி இப்படிப் பட்ட சிக்கல்களைத் தவிர்க்க ஆவன செய்வாரா? கிராமப்புரத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட சிக்கல்கள் தெரியாது என்ற காரணத்தால் சிக்கல் வருகிறது. முதலில் ஆர்வத்தோடு போட்டு விடுகிறோம். ஆனால் இடையிலே ஏற்படுகிற சிக்கலைத் தீர்க்க வழி தெரியவில்லை—எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிறுவனத்தோடு பேசி சரி செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முறையில் விவசாயிகள் நீர்ப்பாசனம் செய்கிறபோது அந்த நீரினுடைய உப்புத் தன்மை காரணமாக, வெய்யில் காலத்தில், உறைந்து சில இடங்களில் அடைப்பு ஏற்படுவது உண்டு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல அந்த ஃபுட் வால்வ்-லே லெதர் கிழிந்து விடுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் கையாண்ட முறையிலே சாணியைக் கரைத்து ஊற்றுவது, மண்ணைக் கரைத்து ஊற்றுவது போன்று எல்லாம் விவசாயிகள் தவறாகப் பயன்படுத்தி வருகிறார்கள். அதுபோன்ற சூழ்நிலை வருகிறபோதும் இதுபோன்ற

[1993 மார்ச் 31

குறைபாடுகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இந்த உபகரணங்களைப் பயன்படுத்துகிறபோது அந்த நிறுவனம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கவேண்டும் என்று அரசின் மூலம் அறிவுறுத்தி இருக்கிறோம. எந்த இடத்தில் அடைப்பு ஏற்படுகிறதோ அந்தப் பாகத்தை நீக்கிவிட்டு புதிய பாகத்தைச் சேர்ப்பதற்கும் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து வருகிறோம். என்வே இதுபோன்ற தவறுகள் வராவண்ணம் அரசு கவனிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. எஸ். துரை முருகன்.

திரு. கே. எஸ். துரை முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் குறிப்பாக கோவை போன்ற மாவட்டங்கள் அடிக்கடி கடுமையான வறட்சிக்கு உள்ளாகின்றன. அதே நேரத்தில் கோவை போன்ற மாவட்டங்களில் அதிகமான தென்னை பயிரிடப்படுகிறது. இந்தத் தென்னை சொட்டு நீர்ப்பாசனத்திற்கு உகந்த பயிராகவும் இருக்கிறது. ஆகவே இந்தச் சூழ்நிலையில் அடிக்கடி கடுமையான வறட்சியால் பாதிக்கப்படும் கோவை போன்ற மாவட்டங்களுக்கு சொட்டு நீர்த் திட்டத்தில் முன்னுரிமை கொடுத்து அதிக நிதி ஒதுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த சொட்டுநீர் தெளிப்பு நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் இந்தியத் துணைக் கண்டத்தில் முன்னுரிமை கொடுத்து அதிக நிதியை ஒதுக்கித் தருவது நம்முடைய முதல்வர் அவர்கள் என்று இந்தியத் துணைக் கண்டத்தை ஆளக்கூடியவர்களே பாராட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.) அதேபோல் இந்தத் திட்டத்தை சிறப்பான முறையிலே தமிழகம் தான் நிறைவேற்றி வருகிறது என்று மத்திய அரசின் பல்வேறு காலகட்டங்களில் பாராட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று சென்ற ஆண்டே கோவை மாவட்டத்திற்கு கூடுதலாகத் தந்திருக்கிறோம். இந்த ஆண்டும் தருவதற்கு வருகிற மானியக் கோரிக்கையில் வழிவகை செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு போவைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்ரேல் போன்ற தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள நாடுகளில் நிலத்திற்கு மேல் பாசனம் என்பது இல்லாமல் முழுவதுமாக சொட்டு நீர்ப்பாசனத்தை மட்டுமே பயன்படுத்தி பழத்

1993 மார்ச் 31]

தோட்டங்கள் மற்றும் பயிர்களை எல்லாம் வளர்த்து வருகிறார்கள். அதைப்போல் பொள்ளாச்சி, கிணத்துக்கடவு போன்ற பகுதிகளில், அதாவது தென்னை அதிகமாக இருக்கும் அந்தப் பகுதிகளில், ஒருங்கிணைந்த சொட்டு நீர்ப் பாசனம் என்ற முறையின் மூலம் அங்கே இருக்கிற எல்லா தென்னை விவசாயிகளும் சொட்டு நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்துகிற வகையில் சொட்டு நீர்ப் பாசனக் கருவிகளை 50 சதவீத மானியத்தில் அரசு கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–55.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசனம் ஏழையெளிய சிறிய விவசாயிகள் மட்டுமே பயன்பெறுகின்ற வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் சிறுசிறு விவசாயிகள் இருப்பார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு 50 சதவிகிதம் மானியத்தில் வழங்குவதற்கு அரசு என்றுமே தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 196, திரு. கே. ஏ. மனோகரன் இருக்கையில் இல்லை.

வினா எண் 197, திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

197—

காஞ்சீபுரத்தில் பொது மக்களுக்கு விற்பனைக்காக வீட்டுவசதி வாரியம் மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்டுதல்

* 10130—திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சீபுரத்தில் பொதுமக்களுக்கு விற்க வீட்டுவசதி வாரியத்தின் மூலம் அடுக்குமாடி வீடுகள் (Flats) கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.